செ.வெ.எண்.361 நாள்.05.06.2018

**திருநெல்வேலி மாநகராட்சி பொருட்காட்சித் திடலில், அரசுப் பொருட்காட்சி–2018 – அரசுத்துறை அரங்குகள் அமைக்கும்பணிகள் துவக்கம்.**

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசுப் பொருட்காட்சி தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழக அரசின் கொள்கைகள், மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை மக்கள் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் அனைத்து அரசுத் துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசுப்பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு திருநெல்வேலி மாநகராட்சி பொருட்காட்சித் திடலில் அரசுப் பொருட்காட்சி–2018 பணிகளுக்கான பூமி பூஜை நடத்தப்பட்டு, பொருட்காட்சி கட்டமைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

அரசுப் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத்துறை, குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, கூட்டுறவுத் துறை, வருவாய் துறை, சமூக நலத்துறை, தோட்டக்கலைத் துறை, பொதுப்பணித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை, நெடுஞ்சாலைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சுற்றுச்சூழல்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மீன்வளத்துறை உள்ளிட்ட 27 அரசுத் துறை அரங்குகளும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம கைத்தொழில் வாரியம், ஆவின், தாட்கோ, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு எரிசக்தி முகமை, திருநெல்வேலி மாநகராட்சி உள்ளிட்ட அரசு சார்பு நிறுவனங்களும், தமிழக அரசின் சாதனைகள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரசுப் பொருட்காட்சி–2018ல் அரங்குகள் அமைக்கப்படவுள்ளது.

மேலும், சிறுவர் முதல் பெரியவர் வரை பொழுதுபோக்கினை உருவாக்கிடும் வகையில் பல்வேறு ராட்டினங்கள், மகளிர் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் அரங்குகள் தனியார் நிறுவனங்கள் மூலம் அமைக்கப்படவுள்ளது.

அரசுப் பொருட்காட்சி துவக்க நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.இரா.ஜெயஅருள்பதி, சென்னை பொருட்காட்சி பிரிவு இளநிலை வரை தொழில் அலுவலர் திரு.டி.பக்த மனோகரதாஸ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.வெ.சீனிவாசன், திரு.எம்.எஸ்.மகாகிருஷ்ணன், கட்டுமானப்பணி ஒப்பந்ததாரார் மற்றும் அரசு எண்டர்டெய்ண்ட்மண்ட் உரிமையாளர் திரு.அண்ணாமலை, திருப்பதி எண்டர்டெய்மெண்ட் உரிமையாளர் திரு.தர்மராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொழில்நுட்ப உதவியாளர் (கட்டுமானம்) திரு.துரைசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.